**சம்மாந்துறை பிரதேச சபை**
**அம்பாரை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2018 ம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 15 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதேச சபை தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து சம்மாந்துறை பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் நிதிநிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (i) 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறான இருப்பு மீதிகள் ரூபா 843,353 தொகையானது நிதிக்கூற்றுக்களில் களஞ்சியப் பொருளாகக் காட்டப்படாது மின்சார வருமதியாகக் காட்டப்பட்டுள்ளதுடன் மின்சார வருமதி மீதியான ரூபா.229,705 தொகை கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தது. | உரிய செலவுகள் உரிய கணக்குகளின் கீழ் விடுபாடுகளின்றி காட்டப்படல் வேண்டும். | பதிவில் ஏற்பட்ட தவறாகும் எதிர்காலத்தில் சரியான தலைப்பின் கீழ் கொண்டுவரப்படும் என்பதை தங்களின் கவனத்திற்கு தயவுடன் அறியத்தருகின்றேன். |
| (ii) வருடாந்த பொருட் கணக்கெடுப்பு சபை அறிக்கையின் பிரகாரம் 2017 மற்றும் 2018 ஆண்டில் ஏலவிற்பனை செய்யப்பட்ட மற்றும் அழிக்கப்பட்ட அலுவலக தளபாடங்கள், உபகரணங்கள் மற்றும் நூலகப்புத்தகங்களின் கிரயம் கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய புத்தகங்களில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இது எதிர்வரும் காலத்தில் கிரயக் கணக்குகளிலிருந்து சீர் செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றேன். |
| (iii) ஏசியா பவுண்டேசன், சமூக நிறுவனங்கள் மற்றும் இதர நபர்களினால் 2017 ஆம் ஆண்டில் சபையின் நூலகங்களிற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட 672 புத்தகங்களின் பெறுமதி ரூபா 476,155 தொகை கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை | குறித்த புத்தகங்களின் பெறுமதி கணக்குகளுக்கு கொண்டு வரப்படல் வேண்டும். | குறிப்பிட்டப்பட்ட புத்தக பெறுமதியானது எதிர்வரும் காலத்தில் கணக்குகளில் சேர்கப்பட்டு சீர்செய்யப்படும் என்பதை தயவுடன் தங்களுக்கு அறியத்தருகின்றேன். |

| | | |
|---|---|---|
| (iv) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட 05 வாகனங்களின் பெறுமதியானது குறித்த அமைச்சினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின்படி அவற்றின் சந்தைப் பெறுமதி ரூபா 61,003,982 தொகையாக காணப்பட்டிருந்தும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 57,695,000 தொகையாக காட்டப்பட்டுள்ளமையால் ரூபா 3,308,982 தொகையினால் நிலையான சொத்துக்கள் மற்றும் திரண்ட நிதி என்பன குறைவாகக் காட்டப்பட்டுள்ளன. | அமைச்சினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் படி சந்தைப் பெறுமதி கணக்குகளுக்கு உள்வாங்கப்படல் வேண்டும் | கடிதம் பிரகாரம் குறிப்பிட்ட தொகையானது இனிவரும் காலத்தில் சீர் செய்யப்படும் என்பதை தங்களின் தயவுடன் அறியத்தருகின்றேன். |

**(ஆ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஆதன வரி அறவீட்டு மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய பதிவேட்டின் பிரகாரம் காணப்பட்ட மீதிகளின் பெறுமதிகளிடையே பின்வரும் வித்தியாசங்கள் காணப்பட்டன. | உரிய மீதிகளின் வேறுபாடுகள் இணக்கம் செய்யப்பட்டு கணக்குகளை சரிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | குறித்த வித்தியாசம் புதிய ஆதனங்களின் தற்காலிய மதீப்பீட்டு அறவீட்டின் பிரகாரமும், தண்ட அறவீடுகளில் இருந்தும் வித்தியாசம் ஏற்படலாம் என்பதை தயவுடன் அறியத்தறுகின்றேன். |

| ஆதன வரி அறவீடு | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் | ஆதன வரி அறவீட்டுப் பதிவேட்டின் பிரகாரம் | வித்தியாசம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| 2018.01.01 மீதி | 13,405,363 | 19,362,697 | 5,957,334 |
| பட்டியல் வருமானம் | 4,329,858 | 5,316,457 | 986,599 |
| 2018.12.31 மீதி | 14,422,133 | 21,366,064 | 6,943,931 |

**(இ) கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 29,811,585 பெறுமதியான 09 கணக்கு விடயங்களுக்கு உரியதாக காணி உறுதி, நிலையான சொத்துப் பதிவேடு, உரிமைப் புத்தகங்கள், விபரமான பட்டியல், நூலகப் புத்தகப் பதிவேடுகள் மற்றும் மெய்மையாய்வு அறிக்கைகள் போன்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் | உரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர் வரும் காலங்களில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் |

கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக மதிப்பாய்வு செய்ய முடியாதிருந்தது.

**1.4 இணக்கமின்மைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள் அத்தியாயம் X இன் பிரிவு 193 | மீளாய்வாண்டிற்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவுத் திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | கூற்றுக்கள் உரிய காலத்தில் தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | குறித்த நடைமுறை இதுவரை பின்பற்றப்படவில்லை 2019 ஆண்டு வரவு செலவுத்திட்ட முறண்பாட்டு விளக்கமடங்கிய கூற்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும் என்பதை தயவுடன் தங்களுக்கு அறியத்தருகின்றேன். |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | ரூபா 3,543,490 பெறுமதியான இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலங்கடந்த 229 வைப்புக்கள் தொடர்பில் சபை உரிய நபர்களிற்கு திருப்பிக் கொடுக்கவோ அல்லது வருமானக் கணக்கிற்கு மாற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கவில்லை. | நிதிப்பிரமாணத் தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறிப்பிட்ட வைப்பாளர்களில் பெரும்பான்மையானவர்களின் முகவரி அவர்களைத் தொடர்பு கொள்ளக்கூடியதுமான எந்த விதமான விபரங்களும் இன்மையினாலேயே தாமதம் ஏற்பட்டுள்ளது. இவற்றைப் கண்டறிந்து உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கான நடவடிக்கை ஏற்கெனவே அரம்பிக்கப்பட்டுள்ளது. |

**1.4.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டில் அறவிடப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட வரி ரூபா 260,154 தொகை உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பப்படாது வைப்பில் காட்டப்பட்டுள்ளது. | உரிய திணைக்களத்துக்கு குறித்த காலப்பகுதிக்குள் அனுப்ப நடவடிக்கை எடுக்கபட வேண்டும். | குறிப்பிட்டப்பட்ட, வைப்பாக காட்டப்பட்டுள்ள பெறுமதி சேர்க்கப்பட்ட வரியினை மீள செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என்பதனைத் தங்களின் மேலான கவனத்திற்கு அறியத் தருகின்றேன். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,943,411 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,855,743 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 3,907,719 | 4,329,859 | 3,313,089 | 14,422,133 | 3,888,000 | 3,901,892 | 2,246,000 | 13,405,364 |
| வாடகைகள் | 20,271,858 | 20,361,397 | 20,873,137 | 8,478,021 | 19,292,000 | 19,008,129 | 19,670,000 | 8,989,761 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,300,000 | 1,408,166 | 1,408,166 | - | 900,000 | 1,231,500 | 1,231,000 | - |
| ஏனைய வருமானம் | 20,640,000 | 22,315,754 | 22,315,754 | - | 18,153,000 | 17,077,927 | 17,078,000 | - |

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரை சபையினால் அறவிடப்படவேண்டிய வருமானம் ரூபா 70,810,301 தொகையில் மீளாய்வாண்டில் ரூபா 47,910,146 தொகை அறவிடப்பட்டிருந்தது. இதன்படி வருமான சேகரிப்பு வீதமானது 68% ஆக காணப்பட்டிருந்தது. | கடந்த வருட நிலுவைகளுடன் மீளாய்வாண்டுக்கான வருமானத்தினையும் அறவிட நடவடிக்கை எடுத்தல் | பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை |

#### 2.2.3 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2013 ஏப்ரல் 26ஆம் திகதிய 1,808 இலக்க குறித்த | | சம்மாந்துறை பிரதேச சபை |

| | | |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசு வர்த்தமானப் பத்திரிகை அறிவிப்பின் மூலம் சபை எல்லைக்குட்பட்ட 22 கிராம சேவகர் பிரிவுகளுக்குள் புதிய ஆதனங்கள் மதிப்பிடுவதற்கு பிரகடனப்படுத்தப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரை இவ்வாதன மதிப்பீட்டு வேலைகளானது பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. இதனால், சபையானது சோலைவரி தொடர்பான குறித்த கிராம சேவகர் பிரிவுகளிலிருந்து அறவிடக்கூடிய வருமானத்தை இழந்து வருகின்றது. | மதிப்பீட்டினை பெற்று சோலைவரி அறிவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எல்லைக்குட்பட்ட 22கிராம சேவகர் பிரிவுக்குள் 16,859 மதிப்பீடு செய்ய வேண்டிய புதிய ஆதனங்கள் உண்டு மதிப்பீடு செய்யதற்கு மாவட்ட விலை மதீப்பீட்டு திணைக்களத்திற்கு கௌரவ தவிசாளர் பல தடவைகள் சென்றதன் பேரில் இம்மாத இறுதிக்குள் மதிப்பீட்டு செய்வதற்கு உத்தியோகத்தர்களை அனுப்புவதாக மாவட்ட விலை மதீப்பீட்டாளர் கூறியுள்ளனர். மதிப்பீட்டறிக்கை கிடைத்தவுடன், குறித்த வரி அறவிடப்படும். |

**2.2.4 வாடகைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சம்மாந்துறை பொதுச் சந்தையிலுள்ள 88 கடையறைகள் 2018ஆம் ஆண்டில் வாடகைக்கு விடப்பட்டுள்ள போதிலும், 2003ஆம் ஆண்டின் பின்னர் ஒப்பந்தங்கள் புதுப்பிக்கப்படவோ அல்லது செய்யப்பட்டிருக்கவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாடகை ஒப்பந்தத்தினை புதுப்பிக்கவோ அல்லது அறவிடவோ நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | குறித்த கடையறைகளுக்கான ஒப்பந்தம் வாடகை தொடர்பான மதிப்பீட்டு நடவடிக்கையினால் தாமதமாகியுள்ளது. தற்போது குறித்த மதிப்பீட்டு விலைமதிப்பீட்டுத் திணைக்கள உத்தியோகத்தரினால் களத்திற்கு வருகைதந்து தரவுகள் திரட்டப்பட்டுள்ளது. விரைவில் மதிப்பீடுகள் கிடைத்தும் புதிதான ஒப்பந்தம் புதிய வாடகை அடிப்படையில் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

**2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 126(vii) (ஊ) இன் பிரகாரம் சபையின் நிர்வாக எல்லைக்குள் அமைக்கப்பட்ட 35 இற்கும் மேற்பட்ட விளம்பர பலகைகளுக்கான மீளாய்வாண்டிற்கான கட்டணமானது 2019 மே 30 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைகள் சட்டத்தின் இன் பிரகாரம் விளம்பர பலகைகளுக்கான கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | குறிப்பிட்ட வியபார நிறுவனங்களுக்கு கடிதம் மூலம் கோரியிருந்தும் அவர்கள் தாங்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு இதற்கான கட்டணங்களை செலுத்துவதாக காரணம் காட்டி நழுவி விடுகின்றனர். |
| (ஆ) 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 122 மற்றும் 126 இன் பிரகாரம், அதிகளவான வியாபார நிலையங்களைக் கொண்ட இப்பிரதேச சபையின் எல்லைக்குள் விளம்பரப் பலகைகளை பொருத்துவதற்கான ஆதாரக் கட்டுமானங்களை நிர்மாணித்து விளம்பரங்களுக்கு வாய்ப்பளித்து அதன் மூலமான விளம்பர வாடகை வருமானத்தை அதிகரிப்பதற்கான மீளாய்வாண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விளம்பர வாடகை வருமானத்தை அதிகரிப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் | டிஜீடல் முறையில் குறித்த விளம்பரப் பலகை பொருத்துவது தொடர்பில் எம்மால் நிதி உதவி கோரி நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும் அரசியல் சூழல் மற்றும் மாகாண சபை கலைப்பு என்பன காரணமாக குறித்த விடயம் தாமதமாகியுள்ளது. இருப்பினும் ஏதாவது அமைச்சினூடாக நிதியினைப்பெற்று குறித்த செயற்திட்டம் இவ்வாண்டு முன்னெடுக்கப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். |

| | | |
|---|---|---|
| (ஆ) சம்மாந்துறை பொதுச்சந்தை கட்டிடம் அமைக்கப்படுவதனால் காணியை இழந்த 14 நபர்களுக்கு பிரதேச செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர், அரசாங்க அதிபர் அடங்கலாக செய்துகொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் கடையறைகள் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது. எனினும் இவர்களது 2003 யூலை 08ஆம் திகதிய ஒப்பந்தத்தின் 10வது நிபந்தனையின் பிரகாரம் ஒப்பந்தமானது, முதலாவதாக 05 வருடத்தின் பின்னரும் அடுத்ததாக 03 வருடத்திற்கொருமுறையும் புதுப்பிக்கப்பட வேண்டுமென கூறப்பட்டுள்ளது. ஆனபோதிலும், இவ்வொப்பந்தங்கள் 15 வருடங்கள் கடந்த நிலையிலும் புதுப்பிக்கப்படாமல் காணப்படுகின்றது. | ஒப்பந்தங்களை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறித்த கடை இயங்காத காரணத்தினால் வாடகைக்குப் பெற்றவர் நிலுவையினை செலுத்த மறுக்கிறார். இவருக்கு சட்ட நடவடிக்கை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் கடை தற்போது எம்மால் பூட்டப்பட்டுள்ளது. திருத்தம் மேற்கொள்ளப்பட்ட பின்னர், புதிதாக விலைமனுக்கோரி கடை வாடகைக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

**2.2.6 ஏனைய வருமானம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டு வரை குத்தகைக்காக வழங்கப்பட்ட இறைச்சிக்கடைகள் தொடர்பில் அறவிட வேண்டிய குத்தகை நிலுவை ரூபா 1,751,340 தொகையானது மீளாய்வாண்டின் இறுதி வரை சபையினால் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கடந்த வருட நிலுவைகளுடன் மீளாய்வாண்டுக்கான வருமானத்தினையும் அறவிட நடவடிக்கை எடுத்தல் | இதுவரையும் இறைச்சிக்கடை குத்தகை செலுத்தாதவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஏனைய குத்தகைக்காரர்களினதும் வழக்குத் தீர்ப்பு கிடைத்ததும் அத்தீர்ப்புக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும். என்பதனையும் தங்களுக்கு தயவுடன் அறியத்தருகின்றேன். |
| (ஆ) மீளாய்வாண்டில் இறைச்சிக்கடை குத்தகையாளர்கள் தங்களது குத்தகைப் பணத்தினை தாமதமாக செலுத்துதல் அல்லது செலுத்தத் தவறும் போது அறவிடப்பட வேண்டிய தண்டப்பணம் மற்றும் சட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஒப்பந்த நிபந்தனையில் தெளிவாக உள்ளடக்கப்படாமையினால் நிலுவைகளை அறவிடுவது தொடர்பில் சபையானது சிக்கல்களை எதிர் நோக்கி வருகின்றது. | குத்தகை ஒப்பந்தத்தில் நிபந்தனைகள் தெளிவாக உள்ளடக்கி தயாரிக்க நடவடிக்கை எடுத்தல் | இறைச்சிக்டை குத்தகையாளர்கள் குத்தகைப் பணத்தை தாமதமாக செலுத்துதல். தண்டப்பண அறவீடு, குத்தகை ஒப்பந்தம், விலைமனுக் கோரல், குறைந்தபட்ச ஏலத்தை தீர்மாணித்தல், போன்ற சில சட்ட சிக்கல்களை தீர்க்கும் முகமாக எமது சபையினால் சட்டத்தரணி ஒருவரை நியமிப்பதற்க்கு சபை முடிவு செய்துள்ளது. இவர் மூலம் எதிர்வரும் 2020 ஆண்டுக்குரிய ஒப்பந்த ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு மேற்படி தவறுகள் நிவர்த்திக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன். |

### 2.2.7 முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட அசைவற்ற ஆதனங்களை மாற்றுகையில் கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தினால் 2017 மற்றும் 2018 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் நேரடியாகவும் நடமாடும் சேவைகள் மூலமாகவும் அறவிட்ட மேலதிக முத்திரை தீர்வையினை கணக்கிடப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மேலதிக முத்திரை தீர்வைத் தொகைக்கான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு அவற்றை அறவிட நடவடிக்கை எடுத்தல். | கல்முனை காணிப் பதிவாளர் திணைக்கமானது, 2018 ஜனவரி தொடக்கம் டிசம்பர் மாதங்களுக்கான முத்திரைக் கட்டண ஆவணங்களை வழங்க அவை உரிய படிவத்தில் தற்போது தயாரிக்கப்பட்டு, காணிப் பதிவாளர் பரிசீலனைக்கு அனுபிவைக்கப்பட்டுள்ளது. இவ்ஆவணங்கள் கையளிக்கப்பட்டதும் 2017ஆம் ஆண்டுக்குரிய விடுபட்ட நிலுவை தொகைக்கான முத்திரை தீர்வை ஆவணங்கள் தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தங்களுக்கு தயவுடன் அறியத்தருகின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 வரையிலும் 05 விடயங்களுக்கு மாத்திரம் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | சட்டத்தின்படி முக்கிய உபவிதிகள் தயாரிக்கப்பட்டு அனுமதியினைப் பெற்று நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தற்போது மாவட்ட ரீதியாக ACLG அலுவலகத்துடன் இணைந்து முக்கியமான துணைவிதிகள் தயாரிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. என்பதை தங்களுக்கு தயவுடன் அறியத்தருகின்றேன். |

#### (ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மேற்கொள்ளப்பட்ட 06 உப விதிகளின் பிரகாரம் சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | உரிய அலுவலருடன் தொடர்பு கொண்டு இத் திட்டத்தினை எதிர் காலத்திள் தயாரிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

**(இ) பணிகளை நிறைவேற்றலின் தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பின்வரும் 03 செயற்பாடுகளின் செயலாற்றலில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.<br>(i) Widening and Asphalt Laying for Vandu Vaikkal Road<br>(ii) Construction of Asphalt concrete Laying for Mal 2nd Cross Road.<br>(iii) Construction of Asphalt concrete Surfacing Road and Drainage for Ismailpuram Road. | குறித்த செயற்பாடுகளிற்கான தாமதங்கள் தொடர்பில் பெறுகை வழிகாட்டி மற்றும் ஒப்பந்தத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் | குறித்த ஒப்பந்தக்காரர் வேலையை துரிதமாக நடைமுறைப்படுத்தி முடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. இவ் வேலையை முடிவுறுத்துவதற்கான நடவடிக்கைகள் மந்த கதியிலேயே நடைபெறுகின்றது. இது தொடர்பான அனைத்தும் ஒப்பந்த நடைமுறைகளும், வழங்குதல்களும் உள்ளூராச்சி ஆணையாளர் அலுவலகத்திலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டத்தின்படி 2030 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுடன் இணங்குமாறு ஒவ்வொரு பொது நிறுவனமும் செயற்பட வேண்டும். இருப்பினும் இது தொடர்பிலான இலக்குகளை அடையாளம் கண்டு அதனை அடைவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலக்குகள் அடையாளங்கண்டு அதனை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்குவதுடன் அதனை அடைவதற்கு நடவடிக்கை எடுத்தல | நிலையான அபிவிருத்தி இலக்கின் 01இற்கமைய வறுமை ஒழிப்புக்காக எம்மால் 2018ல் 05 பெண்களுக்கு 500000 நிதி வாழ்வாதாரத்திற்க்காக ஒதுக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் வறுமை ஒழிப்பின் முக்கிமான ஏதுவான உட்கட்டமைப்பு நடவடிக்கைகளான பாதை சீராமைப்பு புதிய பாதை அமைத்தல் .நிதி ஒதுக்கப்பட்டு செயற்படுத்தபட்டுள்ளது. |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அலுவலக கட்டிடங்கள், பொது நூல் நிலையங்கள், பொதுச் சந்தைகள், பொது விளையாட்டு மைதானங்கள், பொது மையவாடிகள், எலும்பு அரைக்கும் ஆலையம், சிறுவர் பூங்காக்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் விலங்கு அறுமனை என்பன அமைந்துள்ள 48 காணிகளின் உரிமத்தினை சபையின் பெயருக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. | உரிமைப் பத்திரங்களைப் பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும | ஏற்கனவே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பான மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல் உள்ளது. குறித்த பணிகள் தொடராக மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஆ) 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் 08 நபர்களிடமிருந்து அறவிடப்பட்ட ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பு ரூபா 60,811 மற்றும் 19 நபர்களிடமிருந்து அறவிடப்பட்ட | குறித்த அறவீடுகள் மற்றும் பங்களிப்புகளை உரிய நிதியங்களிற்கு | வைப்பிலுள்ள குறிப்பிட்டப்பட்ட பங்களிப்புகளை உரிய இடங்களுக்கு அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய பங்களிப்பு ரூபா 411,583 தெகை என்பன உரிய நிதியங்களிற்து அனுப்பப்படாது வைப்பில் இடப்பட்டிருந்தது. | அனுப்ப நடவடிக்கை எடுத்தல். | மேற்கொள்ளப்படுகின்றது. என்பதை தங்களுக்கு தயவுடன் அறியத்தருகின்றேன். |

**3.3 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத் தவறியமை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இரண்டு உழவு இயந்திரங்கள் முறையே 2016 மற்றும் 2017 ஆண்டு முதல் திருத்தப்படாது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | இது தொடர்பில் திருத்தம் மேற்கொள்ள அல்லது விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்தல் | பழுதடைந்து காணப்பட்ட இரு உழவு இயந்திரங்கள் ஒரு உழவு இயந்திரம் விற்பனை செய்வதற்காக கிழக்கு மாகாண இயந்திர பொறியியலாளயருக்கு அறிக்கை அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் மற்றைய உழவு இயந்திரம் திருத்தம் செயவதற்காக இ.பே.ச. பொறியியலாளரிடம் தொழில்நுட்ப அறிக்கை கோரப்பட்டடுள்ளது. |

**3.4 பெறுகை**

**பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். | இதற்குரிய பயிற்சி பெற்றவர்கள் இடமாற்றம் பெற்றுசென்றுள்ளதனால் அவர்களின் உதவியை பெற்று எதிர்வரும் காலத்தில் இதனை நிவர்த்தி செய்யப்படும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையில் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் நடைபெற்றிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வுப் பிரிவு நிறுவ நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | இச் செயற்பாடு உள்ளூராட்சி மன்றங்களில் சேவையாற்றி அனுபவம் பெற்றவர்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. இடமாற்றம் காரணமாக தற்போது இச் செயற்பாடு மேற்கொள்ளப்படவில்லை. புதிதாக இடமாற்றம் பெற்று வந்தவர்களைக் கொண்டு இச் செயற்பாடு மேற்கொள்ளப்படும் என்பதை தங்களுக்கு தயவுடன் அறியத்தருகின்றோம். |

**4.2 தீர்க்கப்படாத கணக்காய்வு அவதானிப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 1999 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட சபையின் ஹிஜ்ரா பொதுச் சந்தையில் உள்ள 84 கடைகளை வாடகைக்கு வழங்கியது தொடர்பில் கணக்காய்வுக்கு கிடைக்கப்பெற்ற எழுத்து மூல கூற்றின்படி இப்பொதுச் சந்தைக்கு அண்மித்துள்ள தனியார் கடைகள் குறைந்தது மாதாந்தம் ரூபா 6,000 தொடக்கம் ரூபா 20,000 வரையான வீச்சில் வாடகைக்கு வழங்கப்படுகின்ற போதிலும் சபைக்குச் சொந்தமான இக்கடைகள் புதிய விலை மனுக்களை கோராது மாதாந்தம் ரூபா.585 தொடக்கம் ரூபா 3,335 தொகை வரையான வீச்சில் வாடகைக்கு வழங்கிவருவதனால் சபை அண்ணளவான ரூபா 2,700,000 தொகையை வருடாந்தம் இழந்து வருகின்றது. | கடைகளின் வாடகைப்பெறுமதி மீள் மதிப்பீடு செய்யப்படடு வாடகை ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டு ஒப்பந்த நிபந்தனைகளுக்கு அமைவாக கடையறைகள் வழங்கப்படல் வேண்டும். | குறித்த கடைகளின் வாடகை மதிப்பீடு தொடர்பாக 21.02.2019ஆம் திகதி மதீப்பீட்டு உத்தியோகதர்கள் சமூகம் தந்து மதீப்பீடு செய்யப்பட்டு இதன் அறிக்கை இந்த வாரத்தில் தருவதாக கூறியுள்ளார்கள் அம்மதிப்பீட்டறிக்கை கிடைத்ததும் கடைகளின் மாதாந்த வாடகை அதிகரிக்கப்பட்டு வாடகை அறவீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. என்பதை அறியத் தருகின்றேன். |
| (ஆ) | முற்பணக்கொடுப்பனவுகள் தொடர்பாக தீர்பனவு செய்யப்பட வேண்டிய ரூபா580,277 தொடர்பில் உறுதிப்படுத்தக்கூடிய எந்தவிதமான ஆவணங்கள் இன்றியும் அத்தொகையினை தீர்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படாமலும் 14 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது. | முற்பணக்கொடுப்பனவு களை தீர்பனவு செய்யப்பட/ கணக்குகளிலிருந்து பதிவழிப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இவை தொடர்பான ஆவணங்கள் இல்லாத காரணத்தினால் தீர்பனவு நடவடிக்கை மேற்கொள்ளபடவில்லை எமது பழைய அலுவலகத்திலுள்ள ஆவணங்கள் மூலம் குறித்த விபரங்கள் தேடப்படுகின்றன. |